**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வால்பாறை</u>**

முன்னிலை : திருமதி.என்.மீனாட்சி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வால்பாறை.
2026 ஆம் வருடம் மார்ச் திங்கள் 16 ஆம் நாள் திங்கட்கிழமை
விசுவாசுக வருடம் மாசி மாதம் 02 ஆம் நாள்
சுருக்குமுறை வழக்கு எண்:194/2022
**வால்பாறை காவல் நிலைய குற்ற எண் : 318/2020**
CNR NO: TNCB150002572022

குற்றமுறையிடுபவர் : அரசுக்காக:- காவல் ஆய்வாளர்,
வால்பாறை காவல் நிலைய குற்ற எண் :
318/2020

எதிரியின் பெயர் : அன்பழகன், த/பெ. பொன்னுத்துரை,
அய்யர்பாடி 2-வது டிவிசன்,
வால்பாறை.

| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி வழக்கின் சுருக்கம் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | வழக்கின் சுருக்கம் | | | | |
| (i) | எதிரியின் அடைப்பு காவல் நாட்கள் : | எதிரியின் பெயர் | | அடைப்பு காவல் நாள் | விடுவிப்பு நாள் |
| | | 1 | அன்பழகன் | - | - |
| (ii) | புகார் தாக்கல் செய்த நாள் மற்றும் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் : | புகார் தாக்கல் செய்த நாள் | | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | |
| | | 06.01.2021 | | 05.08.2022 | |

MEENATCHI MURUGAN
Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.18 12:50:57 +0530

16.03.2026

DM Cum JM
Valparai

<table>
<tr><td>(iii)</td><td>மேல்விசாரணைக்காக வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்ப உத்தரவிடப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="4">-</td></tr>
<tr><td>(iv)</td><td>கு.வி.மு.ச பிரிவு 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் எதிரியிடம் கேள்விகள் கேட்ட நாள்</td><td>:</td><td colspan="4">18.10.2023</td></tr>
<tr><td rowspan="2">(v)</td><td rowspan="2">அனைத்து பல்வகை மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள். முடிவுகளை எதிர்த்து மேல்நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டிருந்தால் அதன் முடிவுகள். கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழான மனுவை தவிர.</td><td rowspan="2">:</td><td colspan="2">குற்றவியல் பல்வகை மனு எண் .</td><td>மனு நாள்</td><td>முடிவு</td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td></td></tr>
<tr><td rowspan="3">(vi)</td><td rowspan="3">சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td rowspan="3">:</td><td colspan="2">விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் பெயர்</td><td>முதல் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>ஆனந்த்</td><td>23.01.2024</td><td>04.08.2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>ரமணி</td><td>07.10.2024</td><td>07.10.2024</td></tr>
<tr><td rowspan="5"></td><td rowspan="5"></td><td rowspan="5"></td><td>அ.சா.3</td><td>முரளி</td><td>07.10.2024</td><td>07.10.2024</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>பிந்து</td><td>24.10.2024</td><td>24.10.2024</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>கவிதா</td><td>24.10.2024</td><td>24.10.2024</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>காட்வின்</td><td>15.11.2024</td><td>15.11.2024</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>மகேஷ்வரி</td><td>01.04.2025</td><td>01.04.2025</td></tr>
<tr><td>(vii)</td><td>கு.வி.மு.ச பிரிவு 313–ன் கீழ் எதிரியிடம்</td><td>:</td><td colspan="4">05.04.2025</td></tr>
</table>

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.18 12:51:02 +0530

16.03.2026

DM Cum JM
Valparai

| | | | |
|---|---|---|---|
| | விசாரணை செய்யப்பட்ட நாள் | | |
| (viii) | எதிரி தலைமறைவான மற்றும் முன்னிலையான / முன்னிலைபடுத்தப்பட்ட விபரங்கள் | : | - |
| (ix) | மேல்நீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருந்தால் அதன் முடிவுகள். | : | அமர்வு நீதிமன்ற கு.ப. ம.எண்கள்: - ; உயர்நீதிமன்ற எண் மற்றும் தடையாணை நாள்: - ; முடிவு: - |
| (x) | குற்றத்தின் சாராம்சம் | : | 24.12.2020–ம் தேதி 18.30 மணிக்கு வால்பாறை காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கக்கன் காலனி வாதி வீட்டுக்கு முன்பு உள்ள பொது இடத்தில் இவ்வழக்கில் காயம்பட்ட வாதியும், சாட்சி–1 ஐ பார்த்து எதிரி சிறுவர்கள் அப்படித்தாண்டா விளையாடுவாங்க " தேவிடியா பயலே தாயோழி கேனப்புண்ட என அசிங்கமான கெட்ட வார்த்தைகளால் திட்டி பொது ஜன அமைதிக்கு பங்கம் விளைவித்தும், எதிரி, அ.சா.1 கையால் சாட்சி 1ன் கன்னத்தில் அடித்து சாதாரணகாயத்தை ஏற்படுத்தியும், எதிரி, சாட்சி 1–ஐ பார்த்து உன்னை கொல்றேனா இல்லையா பாருடா என குற்றமுறு கொலை மிட்டல் விடுத்துள்ள எதிரியின் இக்குற்ற செயலானது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 506(1)–ன் கீழ் |
| (xi) | எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை, பொய் வழக்கு. |
| (xii) | நீதிபதியின் முடிவு | : | எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள் 294(b), 506(1)–ன் கீழான குற்றச்சாட்டுகள் பொறுத்து குற்றவாளி இல்லை எனவும், இ.த.ச.பிரிவு 323–ன் கீழ் குற்றவாளி என முடிவு. |
| (xiii) | நீதிபதியின் தீர்ப்பு | : | 1. எதிரி மீதான இ.த.ச.பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி |

| | | |
|---|---|---|
| | | நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிக்கு இ.த.ச.பிரிவு 323-ன் கீழ் 1000/- ரூபாய் அபராதம் மட்டும் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் 15 நாட்கள் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும்,<br><br>2. எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள் 294(b) மற்றும் 506(i)-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி கு.வி.மு.ச.பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>3. இவ்வழக்கில் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>4. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 10.03.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் திரு. ராமசந்திரன், B.Sc., LLM., அரசு உதவி வழக்கறிஞர், நிலை-1 அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.M.சிவசுப்ரமணியம். B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.18 12:51:16 +0530

16.03.2026

DM Cum JM
Valparai

## தீர்ப்புரை

1. கடந்த 24.12.2020–ம் தேதி 18.30 மணிக்கு வால்பாறை காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கக்கன் காலனி வாதி வீட்டுக்கு முன்பு உள்ள பொது இடத்தில் இவ்வழக்கில் காயம்பட்ட வாதியும், சாட்சி–1 ஐ பார்த்து எதிரி சிறுவர்கள் அப்படித்தாண்டா விளையாடுவாங்க " தேவிடியா பயலே தாயோழி கேனப்புண்ட என அசிங்கமான கெட்ட வார்த்தைகளால் திட்டி பொது ஜன அமைதிக்கு பங்கம் விளைவித்தும், எதிரி, அ.சா.1 கையால் சாட்சி 1ன் கன்னத்தில் அடித்து சாதாரணகாயத்தை ஏற்படுத்தியும், எதிரி, சாட்சி 1–ஐ பார்த்து உன்னை கொல்றேனா இல்லையா பாருடா என குற்றமுறு கொலை மிட்டல் விடுத்துள்ள எதிரியின் இக்குற்ற செயலானது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 506(1)–ன் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றம் என்று வால்பாறை சார்பு ஆய்வாளர் கு.வி.மு.ச.பிரிவு 173(2) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் இந்நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக இவ்வழக்கை கோப்பிற்கு 05.08.2022 –ம் தேதி அன்று சுருக்குமுறை வழக்கு எண் 194/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு.204–ன்படி அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச.பிரிவு.207–ன் படி வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கி வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வனைய, முதற்நோக்கு முகாந்திரம் இருந்ததால் கு.வி.மு.ச.பிரிவு 251–ன் படி இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 506(1)–ன் கீழான குற்றச்சாட்டின் சாராம்சத்தை எதிரிக்கு புரியும்படி தமிழ் மொழியில் படித்துக்காட்டி விளக்கிகூறி வினவியபோது எதிரி பொய் வழக்கு, குற்றவாளி இல்லை என்று மறுத்து, வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. பின்னர் இந்நீதிமன்றத்தில் அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.18 12:51:22 +0530

16.03.2026 DM Cum JM
Valparai

**<u>அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–</u>**

5. கடந்த 25.12.2020–ம் தேதி வால்பாறை காவல் நிலையத்தில் அ.சா.7 காவல் ஆய்வாளர் அலுவலில் இருந்த போது, அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான அ.சா.ஆ.1 புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.318/2020, சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506(i) இ.த.ச.வாக அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே காலை 11.45 மணிக்கு சம்பவயிடம் சென்று அ.சா.3 மற்றும் அ.சா.6 ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.2 பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் பட்டியல் சாட்சி 2 மனோஜ், அ.சா.2, அ.சா.4, அ.சா.5, அ.சா.3 மற்றும் அ.சா.6 ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் காயம்பட்ட மருத்துவர் பட்டியல் சாட்சி 8–ஐ விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.ஆ.6 காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். இத்துடன் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 506(i)–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். புலன்விசாரணை குறித்த அ.சா.7–ன் சாட்சியத்தோடு அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டுள்ளது.

6. அரசு தரப்பு சாட்சிகள் முடிவடைந்ததும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்களை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)–ன் கீழ் விசாரணை செய்த போது எதிரி அரசு தரப்பு சாட்சிங்கள் கூறுவது பொய் என்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கு என்று தெரிவித்து, எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என தெரிவிக்கப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(i)–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு :–</u>**

8. இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சாட்சிகள் மற்றும்

சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என ஆராய்கையில்,

" 24.12.2020–ம் தேதி 18.30 மணிக்கு கக்கன் காலனி அ.சா.1 வீட்டுக்கு முன்பு உள்ள பொது இடத்தில் அ.சா.1 ஐ பார்த்து, எதிரி சிறுவர்கள் அப்படித்தாண்டா விளையாடுவாங்க " தேவிடியா பயலே தாயோழி கேனப்புண்ட என அசிங்கமான கெட்ட வார்த்தைகளால் திட்டி பொது ஜன அமைதிக்கு பங்கம் விளைவித்தும், எதிரி கையால், அ.சா.1 கன்னத்தில் அடித்து சாதாரணகாயத்தை ஏற்படுத்தியும், எதிரி, அ.சா.1–ஐ பார்த்து உன்னை கொல்றேனா இல்லையா பாருடா என குற்றமுறு கொலை மிட்டல் விடுத்து எதிரி இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 506(1)–ன் படி தண்டிக்கத்தக்க குற்றமிழைத்திருப்பதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

9. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமென வாதம் முன்வைத்தார்.

10. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், எதிரிக்கும், வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமல்ல. அ.சா.1–ஐ தவிர கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள மற்ற சாட்சிகள் பிறழ்சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.6 அக்கறை சாட்சியாவார். எதிரி இந்து மதத்தை சார்ந்தவர் ஆவார். அ.சா.1 கிறிஸ்துவ மதத்தை சார்ந்தவர் ஆவார். இரு மதங்களுக்கிடையே பிரச்சனை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அ.சா.1 தவறாக புகார் கொடுத்து இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்பதால் எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென வாதம் முன்வைத்தார்.

11. அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. அ.சா.1 நிகழ்நிலை புகார்தாரரர் மற்றும் பாதிக்கப்பட்டவர் ஆவார். இவர் தன் சாட்சியத்தில்,

வழக்கு சம்பவம் குறித்தும், தனக்கு ஏற்பட்ட காயம் குறித்தும் அ.சா.ஆ.1 புகார்மனுவை அனுசரித்து சாட்சியமளித்து, அ.சா.ஆ.1 புகார்

கொடுத்ததாக ஒப்புக்கொண்டு, இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது ஆஜர் எதிரி தான் என்று எதிரியை அடையாளம் காட்டி சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில், கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள தனிநபர் சாட்சிகளான அ.சா.2, அ.சா.4, அ.சா.5 சாட்சிகள் வழக்கு சம்பவம் பற்றி தெரியவில்லை என்று அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ்சாட்சியமளித்துள்ளார்கள். இவர்களது சாட்சியம் பாதிக்கப்பட்டவரான அ.சா.1–ன் சாட்சியத்தை உறுதிபடுத்தும் வகையில் இல்லை. அ.சா.2, அ.சா.4, அ.சா.5 சாட்சிகளை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதிலும், அரசு தரப்பிற்கு ஆதரவாக இவர்களது சாட்சியம் இல்லை.

13. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில், போலீசார் JBR வீட்டு அருகே போலீசார் விசாரித்ததாகவும், படம் வரைந்து அதில் தன்னிடம் கையொப்பம் கேட்டதாகவும், அ.சா.ஆ.2 பார்வை மகஜரிலுள்ள 1–வது கையொப்பம் தன்னுடையது என ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில்,

**" நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்."** – என சாட்சியமளித்துள்ளார்.

14. மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.6 தன் சாட்சியத்தில், 24.12.2020–ம் தேதி வழக்கு சம்பவம் நிகழ்ந்ததாகவும், 25.12.2020–ம் தேதி போலீசார் கக்கன் காலனி வந்து சம்பவம் குறித்து விசாரணை செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு, வரைபடம் வரைந்ததாகவும், மற்றொரு தாளில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், தன்னுடன் அ.சா.3 முரளி கையொப்பம் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

15. அரசு தரப்பில் அ.சா.6 பார்வை மகஜர் சாட்சியாக முன்னிடப்பட்ட போதிலும், அ.சா.6 தன் சாட்சியத்தில், அ.சா.1 வீட்டின் மாடியில் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தது தொடர்பாக எதிரிக்கும், அ.சா.1–க்கும் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக எதிரி அ.சா.1–ஐ தாயோழி கேணப்புண்டை என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, கையால் அடித்தார் என சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக சாட்சியமளித்துள்ளார்.

16. அரசு தரப்பில் அ.சா.6 பார்வை மகஜர் சாட்சியாக முன்னிடப்பட்ட போதும், அ.சா.6 தான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக கு.வி.மு.ச.பிரிவு 161(3)–ன்

வாக்குமூலத்திற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ள நிலையில், அ.சா.6–ன் சாட்சியம் நம்பகத்தன்மை வாய்ந்ததா என்பதை கூர்ந்து பரிசீலிக்கும் போது, அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில்,

**" அ.சா.1 தனது அக்காவின் கணவர் என்றால் சரிதான்"** – என்றும்,

அ.சா.6 தனது மறுவிசாரணையில்,

**" வழக்கு சம்பவத்தின் போது அ.சா.1–க்கும் எனது அக்காவிற்கும் திருமணம் ஆகியிருந்ததா என்றால் இல்லை. எனது அக்காவிற்கும், அ.சா.1–க்கும் எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்றால் 15.10.2022–ம் தேதி திருமணம் நடைபெற்றது. "** –என்றும்,

அ.சா.6 மறு குறுக்கு விசாரணையில்,

**" அ.சா.1 சம்பவத்தின் போது எங்கு குடியிருந்தார் என்றால் கக்கன் காலனியில் குடியிருந்தார். வீட்டு எண், தெரு பெயர் என்ன என்றால் அது எனக்கு தெரியவில்லை. சம்பவத்தின் போது நான் எங்கு குடியிருந்தேன் என்றால் சவரங்காடு எஸ்டேட்டில் குடியிருந்தேன். அ.சா.1 எனக்கு உறவினரா என்றால் இல்லை நானும் அவரும் ஒரே சர்ச்சுக்கு போவோம்."** – என்றும் அளித்துள்ள சாட்சியத்தை பார்வையிடும் போது, அ.சா.1, அ.சா.6–க்கு உறவினர் என்பது தெளிவாகிறது. எனவே, வழக்கு சம்பவம் குறித்து, அ.சா.6 கு.வி.மு.ச.பிரிவு 161(3)–ன் வாக்குமூலத்திற்கு முரண்பட்டு அளித்துள்ள சாட்சியம் ஏற்கத்தக்கதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. அ.சா.ஆ.2– பார்வை மகஜரை பரிசீலனை செய்யும் போது, வழக்கு சம்பவம் கக்கன் காலனியில் அ.சா.1 வீட்டிற்கு முன்பு நிகழ்ந்ததாகவும், சம்பவயிடத்திலிருந்து மேற்கே சுமார் 10 அடி தொலைவில் கோபி வீடும், அதனை தொடர்ந்தாற் போல் மணி வீடும், அதனை தொடர்ந்தாற் போல் JBR காம்ப்ளக்ஸ் அமைந்துள்ளது என உள்ளது. அ.சா.3 தனது சாட்சியத்தில், போலீசார் கக்கன் காலனி JBR வீட்டருகே விசாரித்ததாகவும், படம் வரைந்து தன்னிடம் கையொப்பம் கேட்டதாகவும், அதில் தான் கையொப்பம் செய்ததாகவும் அளித்துள்ள சாட்சியத்திலிருந்து, வழக்கு சம்பவம் குறித்து போலீசார் சம்பவயிடம் சென்று விசாரித்து அ.சா.ஆ.2 பார்வை மகஜர், அ.சா.ஆ.3 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

18. அ.சா.7 சாட்சியத்தில், அ.சா.ஆ.1–ன் அடிப்படையில், அ.சா.ஆ.4 பதிவு செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2, அ.சா.ஆ.5 தயார் செய்து, சாட்சிகளை விசாரணை செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

19. அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களையும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்களையும் ஒன்று சேர்த்து பரிசீலனை செய்கையில், பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 மட்டுமே அரசு தரப்பு வழக்கை ஒத்தேற்ப்பு செய்து சாட்சியமளித்துள்ளார். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.2, அ.சா.4, அ.சா.5 ஆகியோர்கள் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ள நிலையில் இவ்வழக்கானது புகார்தாரரான காயம்பட்ட அ.சா.1–னின் சாட்சியத்தை மட்டுமே சார்ந்துள்ளது.

20. அ.சா.1–ன் சாட்சியத்தை உறுதிபடுத்தும் வகையில், கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியம் இல்லை என்பதால், அ.சா.1–ன் சாட்சியத்தை முழுமையாக ஒதுக்கிவிட முடியாது. அ.சா.1 பாதிக்கப்பட்டவர் ஆவார். இவரது சாட்சியம் மிக முக்கியதன்மை வாய்ந்ததாகும். அ.சா.1 தன் சாட்சியத்தில்,

" தான் கக்கன் காலனியில் நான்கு மாடி குயிருப்பில் 2–வது தளத்தில் வசித்து வருவதாகவும், அந்த தெருவில் இருக்கும் பசங்க தனது வீட்டின் மொட்டை மாடியில் அடிக்கடி வந்து விளையாடுவார்கள். விளையாடும் போது, பயங்கர சத்தம் இருக்கும் போது, வீட்டில் டிஸ்டரப் ஆகிறது. அதனால் ஏமோசன் ஆகிறது மனதளவில் பாதிக்கப்பட்டேன். அதனால் பசங்களிடம் பலமுறை எச்சரித்தேன். அதே போல் 21.12.2020 அன்று மதியம் 02.00 மணியளவில் அதே மாதிரி விளையாடும் போது இங்க விளையாடக்கூடாது என்று விரட்டிவிட்டேன். அந்த சிறுவர்கள் அவர்களுடைய பெற்றோர்களிடம் நான் அடித்ததாக சொல்லி பெற்றோரை எனது வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். ரமேஷ், பக்கத்தில் இருந்த 2 பசங்களின் பெற்றோர்கள் எனது வீட்டிற்கு மாலை 06.00 மணிக்கு வந்தார்கள். இந்த மாதிரி வரும்போது பாரத்சேனாவை சேர்ந்த அன்பழகன் என்பவரை அழைத்து வந்தார்கள். நாங்கள் பேசிக்கொண்டே இருக்கும் போது அன்பழகன் என்னை ஓங்கி இடது கன்னத்தில் அரைந்தார். அதுமட்டுமல்லாமல் ரொம்ப மோசமான கெட்ட வார்த்தையால் தேவடியா மகனே, கேனப் புண்ட என்று திட்டினார். இதுபோன்று நிறைய அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டினார். அதோடு உன்னை கொல்றனா இல்ல பாருடா என்று சொன்னார். அதனால் ஓங்கி அடித்த வலியிருந்த காரணத்தால் வால்பாறை GH சென்று சிகிச்சைக்காக சேர்ந்தேன். மறுநாள் 25.12.2020 அன்று வால்பாறை போலீஸ் ஸ்டேசனில் புகார் கொடுத்தேன். தற்போது, என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னை அடித்து, கெட்ட வார்த்தையால் திட்டியவரை அடையாளம் காட்டமுடியும். ஆஜர் எதிரி தான் என்னை

அசிங்கமாக திட்டி அடித்த நபர். போலீசார் என்னை விசாரித்தார்கள். " – என சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 முதல் விசாரணையில் அளித்துள்ள சாட்சியத்தை பாதிக்கும் வகையில், அ.சா.1–ன் சாட்சியத்தை மறுக்கும் வகையில் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

21. புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7, அ.சா.1–னிடம் 25.12.2020–ம்தேதி காலை 10.45 மணிக்கு அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று, அ.சா.ஆ.4–ஐ பதிவு செய்ததாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.ஆ.4–ஐ பரிசீலனை செய்கையில், 25.12.2020–ம் தேதி அ.சா.ஆ.1 புகாரை பெற்று நிலைய குற்ற எண்.318/2020–ல் அ.சா.ஆ.4 பதிவு செய்ததாக காணப்படுகிறது.

22. அ.சா.1, அ.சா.3, அ.சா.6, அ.சா.7 சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்களிலிருந்தும், 24.12.2020–ம் தேதி வழக்கு சம்பவம் நிகழ்ந்துள்ளது என்பதும், அ.சா.ஆ.6 காயச்சான்றில் இருந்து, அ.சா.1 தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுக்க மருத்துவமனை சென்றுள்ளார் என்பதும், பின்பு 25.12.2020–ம் தேதி அ.சா.ஆ.1 புகார் கொடுத்து, அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது.

23. அ.சா.1–ன் சாட்சியத்தில், எதிரி தன்னை அசிங்கமாக பேசியதாகவும், கையால் அடித்து காயப்படுத்தியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**As per decision cited in A.Rajasekar Vs State By Inspector Of Police – Crl.O.P.No. 17945 of 2023 an d Crl.M.P.Nos. 11843 of 2023 and 7400 of 2024 dated – on 26 March 2025 – Hon'ble High Court of Madras held in**

Para 7. In order to attract the offence under Section 294(b) of IPC, there must be an uttering of words to affect the person who lodged the complaint. In this regard it is relevant to extract the Section 294(b)
of IPC, as follows :-

"294. Obscene acts and songs —Whoever, to the annoyance of others— (a) does any obscene act in any public place, or (b) sings, recites or utters any obscene song, ballad or words, in or near any public place, shall be punished with

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.18 12:52:03 +0530

16.03.2026 DM Cum JM
Valparai

imprisonment of either description for a term which may extend to three months, or with fine, or with both.

8. Admittedly, there is absolutely no words uttered by the petitioners as such to constitute the offence under Section 294(b) of IPC, there is no averments and allegations. Further the charges do not show that on hearing the obscene words, which were allegedly uttered by the petitioners, the witnesses felt annoyed. No one has spoken about the obscene words, they felt annoyed and in the absence of legal evidence to show that the words uttered by the petitioners annoyed others, it can not be said that the ingredients of the offence under Section 294(b) of IPC is made out.

9. It is relevant to rely upon the judgment reported in 1996(1) CTC 470 in the case of K.Jeyaramanuju Vs. Janakaraj & anr., which held as follows :-

"To prove the offence under Section 294 of IPC mere utterance of obscence words are not sufficient but there must be a further proof to establish that it was to the annoyance of others, which is lacking in the case." The above judgment is squarely applicable to the present case and therefore, the offence under Section 294(b) of IPC is not at all attracted as against the petitioners.

10. Insofar as the offence under Section 506(i) of I.P.C is concerned, threat and intention to cause an alarm are main ingredients. The third ingredient is that the intention must be to cause any person to do any act which he is not legally bound to do or to omit to do any act which that person is legally entitled to do, subsequent to the main ingredients. Whereas in the case on hand, even according to the case of the prosecution, the alleged threats issued by the petitioners was only empty threats and they had no effect on the complainant.

11. In this regard, it is relevant to rely upon the judgment of this Court made in Crl.O.P.(MD)No.11030 of 2014 in the case of Abdul Agis Vs. State through the Inspector of Police, which reads as follows:-

“7. It is seen from the statements recorded under Section 161(3) of Cr.P.C. of thesecond respondent/ defacto complainant that it does not contain any obscene words, which were uttered by the petitioner herein and the entire allegations are very simple in nature. It is also seen from the statement of one Uthami, that the petitioner threatened the defacto complainant with dire consequences when he dashed the

defacto complainant. The entire allegations are trivial in nature. Further, to attract the offence under Section 506(i) of I.P.C., there was a threatening only by words. As A.Rajasekar vs State By Inspector Of Police on 26 March, 2025 Indian Kanoon - http://indiankanoon.org/doc/133075472/ 3 pointed by the learned counsel appearing for the petitioner, the threat should be a real one and not just a mere word when the petition uttering does not exactly mean what he says and also when the person to whom threat is launched does not feel threatened actually. Therefore, the offences under Sections 294(b) and 506(i) of I.P.C. are not made out as against the petitioner herein and also the entire criminal proceedings is clear an abuse of process of Court. Therefore, this Court is inclined to quash the entire proceedings."

12. In the light of the above and considering the nature of the allegations made, it is clear that the charges framed against the petitioners do not prima facie disclose commission of an offence under the provisions invoked. The material placed before this Court does not appear to sustain the charges and the same lacks specific details to establish the alleged offences.

13. In view of the foregoing discussion, the entire proceeding in C.C.No.16687 of 2022 on the file of the learned V Metropolitan Magistrate, Egmore, Chennai is hereby quashed as against the petitioners. Accordingly, this Criminal Original Petition stands allowed. Consequently, connected miscellaneous petitions are closed.
**- மேற்கண்ட முன் தீர்ப்பிலிருந்து, இ.த.ச.பிரிவு** 294(b)**-ன் கீழான குற்றத்தை நிரூபிக்க அசிங்கமான வார்த்தைகளால் திட்டுவது மட்டும் போதாது, அது மற்றவர்களுக்கு தொந்தரவு அளிக்கும் வகையில் எரிச்சலூட்டுவதாக** ( annoyance of others) **இருந்திருக்க வேண்டும் என்பதும், இ.த.ச.பிரிவு** 506(i)**-ன் கீழான குற்றத்தை பொறுத்தவரை அச்சுறுத்தல் மற்றும் எச்சரிக்கை ஏற்படுத்தும் நோக்கம் என்பது முக்கியகூறுகள் என்பதும், மேலும், எந்தவொரு நபரும் சட்டப்பூர்வமாக செய்ய கட்டுப்படாத எந்தவொரு செயலையும் செய்ய வைப்பது அல்லது அந்த நபர் சட்டப்பூர்வமாக செய்ய உரிமையுள்ள எந்தவொரு செயலையும் செய்ய தவற வைப்பது நோக்கமாக இருக்க வேண்டும் என்பதும், அச்சுறுத்தலாதனது வெற்று வார்த்தைகள் மட்டுமே குற்றமுறு மிரட்டல் ஆகாது என்பது தெளிவாகிறது**.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.18 12:52:31 +0530

16.03.2026

DM Cum JM
Valparai

24. இந்த வழக்கில், இ.த.ச.பிரிவு 294(b)-ஐ பொறுத்து அ.சா.1 தனது முதல் விசாரணையில், எதிரி " ரொம்ப மோசமான வார்த்தையால் கேனப் புண்ட என்று திட்டினார். இதுபோன்று நிறைய அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டினார்."-என உள்ளது. அ.சா.1-ன் சாட்சியத்தில், எதிரி அசிங்கமான வார்த்தையால் திட்டியதால் யாருக்கும் அருவருக்கத்தக்க வகையில் தொந்தரவு ஏற்பட்டு எரிச்சலூட்டியதாக ( annoyance of others) அ.சா.1-ன் சாட்சியத்தை உறுதிபடுத்தும் வகையில் சாட்சியம் இல்லை.

25. இ.த.ச.பிரிவு 506(i)-ஐ பொறுத்த வரை, அ.சா.1-ன் சாட்சியத்தில், எதிரி "அதோடு உன்னை கொல்றனா இல்ல பாருடா என்று சொன்னார்." -என உள்ளது. அ.சா.1-ன் சாட்சியத்தில், எதிரி சட்டப்படி செய்ய வேண்டிய செயலை செய்யவிடாமல் தடுக்க அல்லது சட்டப்படி செய்யக்கூடாத செயலை செய்யும் படியான நோக்கத்தில் தன்னை மிரட்டியதாகவோ அதனால் தனக்கு பயமோ, அச்சம், பீதி ஏற்பட்டதாகவோ இல்லை.

26. இ.த.ச.பிரிவு 323-ஐ பொறுத்தவரை அ.சா.1 சாட்சியத்தில், " நாங்கள் பேசிக்கொண்டே இருக்கும் போது, அன்பழகன் என்னை ஓங்கி இடது கன்னத்தில் அறைந்தார். அதுமட்டுமில்லாமல் கேனப் புண்ட என்று திட்டினார். இதுபோன்று நிறைய அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டினார். அதோடு உன்னை கொல்றனா இல்ல பாருடா என்று சொன்னார். அதனால் ஓங்கி அடித்த வலியிருந்த காரணத்தால் வால்பாறை GH சென்று சிகிச்சைக்காக சேர்ந்தேன்." - என எதிரி அ.சா.1-ஐ கன்னத்தில் அடித்ததில் தனக்கு வலி இருந்ததாகவும், சிகிச்சைக்காக மருத்துவமனை சென்றதாக சாட்சியமளித்துள்ளார்.

27. இந்த வழக்கில் அ.சா.1-க்கு சிகிச்சை அளித்தாக முன்னிடப்பட்டுள்ள பட்டியல் சாட்சி 8 மருத்துவரை சாட்சியாக விசாரிக்காமல் அரசு தரப்பில் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1-க்கு அளித்த காயச்சான்று, புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7-ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.7 சாட்சியத்தில், மருத்துவர் தன் காயச்சான்றில், காயத்தன்மை குறித்து கருத்துக்கூற இயலவில்லை என சான்றளித்தார் என சாட்சியமளித்துள்ளார். அ.சா.1-க்கு ஏற்பட்ட காயத்திற்கு கருத்துக்கூற இயலவில்லை என்ற போதிலும், அ.சா.ஆ.6 காயச்சான்றில் இருந்து அ.சா.1 சம்பவதினத்தன்று சிகிச்சைக்காக மருத்துவமனை சென்றேன் என அ.சா.1 அளித்துள்ள சாட்சியத்தை உறுதிபடுத்தும் வகையில் உள்ளது. அ.சா.1 சாட்சியத்திலிருந்தும், அ.சா.ஆ.6

காயச்சான்றிலிருந்தும், எதிரி அ.சா.1-ஐ கன்னத்தில் அடித்து, அ.சா.1-க்கு வலி ஏற்பட்டதால் அ.சா.1 சிகிச்சைக்காக மருத்துவமனை சென்றுள்ளார் என்பது தெளிவாவதால் எதிரி அ.சா.1-ஐ கன்னத்தில் அடித்து சாதரண காயம் ஏற்படுத்தியதாக உள்ள எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவு**

28. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவு 294(b), 506(i)-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டவில்லை என்றும், இ.த.ச.பிரிவு 323-ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

29. எதிரி மீதான இ.த.ச.பிரிவு 323-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ள நிலையில் எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 255(2)-ன் கீழ் தண்டனை பற்றி வினவிய போது, கீழ்கண்ட பதில் அளித்தார்.

**எதிரியின் பதில்:**

**“ இந்த குற்றத்திற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. சம்பவ சமயத்தில் என்னுடன் 2 PSO இருந்தார்கள். அவர்களுடன் தான் நான் சம்பவயிடம் சென்றேன்.”**

30. எதிரியின் பதிலை கருத்திற்கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்திற்கொண்டும் அ.சா.1–க்கு ஏற்பட்ட காயத்தன்மையை கருத்திற்கொண்டும் இந்நீதிமன்றம் கீழ்கண்ட தண்டனையை வழங்குகிறது.

**31. எனவே, முடிவாக,**

1. எதிரி மீதான இ.த.ச.பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிக்கு இ.த.ச.பிரிவு 323–ன் கீழ் 1000/–ரூபாய் அபராதம் மட்டும் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் 15 நாட்கள் மெய்க்காவல்

சிறைதண்டனை விதித்தும்,

2. எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள் 294(b) மற்றும் 506(i)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி கு.வி.மு.ச.பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. இவ்வழக்கில் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 16–ம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.18 12:52:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் வால்பாறை.

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | ஆனந்த் |
| அ.சா.2 | ரமணி |
| அ.சா.3 | முரளி |
| அ.சா.4 | பிந்து |
| அ.சா.5 | கவிதா |
| அ.சா.6 | காட்வின் |
| அ.சா.7 | மகேஷ்வரி ( உதவி ஆய்வாளர்) |

**<u>அரசுதரப்பு சான்றாவணங்கள் :–</u>**

1. அ.சா.ஆ. 1 – புகார்
2. அ.சா.ஆ. 2 – பார்வை மகஜர்
3. அ.சா.ஆ. 3 – பார்வை மகஜரிலுள்ள 2–வது கையொப்பம்
4. அ.சா.ஆ. 4 – முதல் தகவல் அறிக்கை
5. அ.சா.ஆ. 5 – மாதிரி வரைபடம்
6. அ.சா.ஆ. 6 – காயச்சான்று

**<u>சான்றுப் பொருட்கள்</u>:–** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்</u>:–** இல்லை.

**<u>குறிப்பு:–</u>**

1. எந்த சாட்சியும் மூன்று முறைக்குமேல் அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.18 12:53:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

16.03.2026 DM Cum JM
Valparai